# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூரு] யாழ்ப்பாணம்:- நந்தன ஹு ஆடி மீ ௩ உ வெள்ளிக்கிழமை (18 July 1952) [இல - உஅ]

# உணவைப் புனிதமாய் உபயோகியுங்கள்

## நகரத் தலைவர் நயந்து வேண்டுகின்றார்

(சென்ற இதழிற் பிரசுரிக்கப்பட்ட நகரசபைத் தலைவர் நன்மொழித் தொடர்ச்சியாக உள்ள வேண்டுகோள்)

F. சோடாக் கம்பனிகளில் வெறுமையான சோடாப்போத்தல்கள் சரியாகக் கழுவப்படுவதில்லை. சில சோடாப் போத்தல்களைத் திறக்கும்பொழுது மண்ணெண்ணெய் மணம் அல்லது தேங்காய் எண்ணெய் மணம், அல்லது ஆஸ்பத்திரி மருந்துகள் மணம் கொடுக்கின்றன.

G. உணவு வழங்கப்படும் அறைகள் நல்ல வெளிச்சமின்றியும், கரப்பன் பூச்சிகள் எங்கும் ஊர்ந்து செல்லுமிடமாயும் இருக்கின்றன. சாப்பாட்டு அறையில் எப்பொழுதும் அருவருக்கச் செய்யும் ஊசல் துர்நாற்றம் இருக்கின்றது.

H. உணவை இலையான், புழுதி படக் கூடியதாகத் திறந்து வைத்தல்.

இப்படியான நிலைபரங்கள் உள்ள இடங்களில் நான் ஏற்கனவே சொல்லிய வியாதிகள் மிதமாக உண்டாகும் என்பதைப்பற்றி நீங்களும் ஒத்துக்கொள்வீர்கள். இப் பட்டணவாசிகளாகிய நாங்கள் இவ்வித முறைப்பாடுகள் நிலைத்திருக்க விடுதல் நீதியாகுமா?

உணவுப் பொருட்களைக் கையால் தொட்டு வியாபாரஞ் செய்யும் சிலரிடத்தில் காணப்படாத நல்ல பழக்கங்கள் சிலவற்றை ஆராய்வோம்.

### புனித ஒழுக்க முறைகள்

கீழைத்தேச வாசிகளாகிய நாங்கள் மலசலகூடங்களுக்குச் சென்றபின் நீரினாற் சுத்தஞ் செய்கிற வழக்கத்தையுடையவர்களாய் இருக்கிறோம். நீண்ட நகங்களையுடையவர்கள் மலசல விமோசனம் செய்யும்போது தங்களுடைய விரல் நகங்களுக்கிடையே சிறிதளவான மல அழுக்குகளைச் சேர்த்து வைத்திருக்கிறார்கள். இவர்கள் உணவைத் தொட்டுப் பரிமாறமுன் தங்களுடைய கரங்களைத் தண்ணீரும் சவர்க்காரமும்கொண்டு கழுவுவதில்லை. இவ்வாறு செய்யாததினால் அவர்கள் தங்கள் கையிலிருக்கும் நோய்க் கிருமிகளைத் தாம் பரிமாறும் உணவுப் பொருட்களிலே புகுத்திவிடுகிறார்கள். தவிர, இவ்வாறு நடந்துகொள்ளுதல் மிகவும் வெறுக்கத்தக்க காரியமாகும். கையால் உணவைத் தொட்டு வியாபாரஞ் செய்வோர்களே! உங்கள் நகங்களைக் குறுக வெட்டுவதோடு மலசல விமோசனத்திற்குப் பின் உடனுக்குடனேயே உங்கள் கைகளைச் சவர்க்காரமும் தண்ணீரும் கொண்டு கழுவிச் சுத்தஞ்செய்வீர்களாக. அத்துடன் மலசலகூடத்தைப் பாவிக்கிற ஒவ்வொரு முறையும் வாளியில் இருக்கும் மலத்தை மரத்தூளினால் அல்லது மண்ணினால் மூடிவிட வேண்டும் என்பதையும் கவனிப்பீர்களாக. அப்படிச் செய்வதினால் துர்நாற்றம் இல்லாமற் போவதோடு ஈக்களும் மலத்தில் வந்துசேராமல் தடைசெய்யவும் கூடும். மலகூடம் எப்பொழுதும் புனிதமாகவும் அசுத்தமில்லாமலும் தக்கமுறையில் கவனிக்கப்படல்வேண்டும்.

### நகரவாசிகள் கவனிக்கவேண்டியன

உணவு விற்பனையாளருடன் நகர வாசிகளில் ஒரு சிலரும் குற்றவாளிகளாகக் கருதப்படுவதற்கு இன்னொரு விஷயம் காரணமாகின்றது. தெரு வீதிகளில மக்களின் சுகத்துக்குத் தீங்கை விளைவிக்கக்கூடிய குப்பை கூளங்களைக் கண்டபடி எறிந்துவிடுகின்ற அச்செயலைத்தான் நான் குறிப்பிடுகின்றேன். இந்த நகருக்கு விஜயஞ் செய்துள்ள அநேகர் நாட்டில் அபிமானமில்லாத இந்தச் செய்கையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சில வியாபார ஸ்தலங்களின் புறக்கோடிகளிலே சாக்கடைகள் (கான்கள்) இருக்கின்றன. இவைகள் அநேகமாக ஒருபோதும் சுத்தஞ் செய்யப்படுவதில்லை. தொற்றுநோயைத் தடுக்கும் நிவாரணிகள் (Disinfectants) ஒருபோதும் பாவிக்கப்படுவதில்லை. இவ்விடங்கள் இலையான்கள் உற்பத்தியாகி விருத்தியடைவதற்கு மிகச் சிறந்தனவாக விருக்கின்றன. வாடிக்கைக்காரர்கள் தமது உணவைச் சாக்கடைகளிலிருந்து எழும்புகின்ற துர்நாற்றத்தைத்தானும் கவனியாமல் சகித்துக்கொண்டு உண்ணவேண்டியிருக்கிறது. எந்தவகைய குப்பை கூளங்களையும் தெருவீதிகளில் தயவுசெய்து எறிந்துவிட வேண்டாம். ஆனால் அவைகளைக் குப்பை வாளிகளில் சேர்த்து வையுங்கள். உங்களுடைய சாக்கடை (கான்) களையும் நளாந்தம் சுத்தஞ் செய்து தொற்றுநோய் நிவாரணிகளையும் பாவிப்பீர்களாக.

### உணவு நிலையங்களை நடத்துவோர் கடமை

உணவுவிநியோகிப்போரைப் பற்றி நாம் இதுவரை உரையாடியமையால், இனி உணவு விநியோகிப்போர் ஸ்தாபனங்களின் அதிபர்களுக்கும் இதை ஓர் விண்ணப்பம் சமர்ப்பிப்பது தகுதியேயாகும். உணவு விநியோகிப்போர் தம் பொறுப்பை எவ்வளவுதான் உணர்ந்தபோதும், நீங்கள் அவர்கட்கு வேண்டிய சௌகரியங்களையும் கட்டட வசதிகளையும் கொடாது விடின், அவர்கள் தங்கள் சேவைகளைத் தகுந்த முறையிற் செய்து கொள்ள முடியாது. உங்கள் தொழில் பண வருவாயுள்ள ஓர் வியாபாரமாகிவிட்டபடியால், உங்களுடைய ஆதாயப் பணத்தில் ஒரு குறித்த பாகத்தைச் சுத்தமான உணவு, சுத்தமான சுற்றுடல் அமைத்தல் ஆகியவற்றில் செலவு செய்யுமாறு உங்களைக் கேட்பது நியாயமானதொன்றே. நல்ல வேலைக்காரர்களைத் தெரிந்தெடுத்து அவர்கட்குத் தகுந்த சம்பளமும் கொடுப்பின் அவர்கள் தங்களாலியன்ற நல்ல சேவை புரியப் பிரயத்தனஞ் செய்வார்கள். தகுந்த சேவை புரியும் எந்த ஸ்தாபனமும் ஆதரிப்போர் பலரைக் கவருமென்பது நிச்சயம். ஓர் இடத்தைக் கவர்ச்சியுடையதாகவும் தகுதியுடையதாகவும் ஏற்படுத்தினால் அது அதிக வருவாயைக் கொடுக்கும். அதிபர்கள் யாவரும் தொற்றுநோய்களைப்பற்றியும், சுகாதாரம் உணவுச் சத்து ஆகியவற்றின் பிரதமவிதிகளைப்பற்றியும் நன்கு உணர்ந்திருக்க வேண்டுமென்பது எனது அபிப்பிராயம். உங்கள் தொழிலில தத்துவரீதியான ஆர்வம் எடுக்குமாறு நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன். வியாபார விருத்தி மட்டும் உங்கள் தனிநோக்கமாக இருத்தலாகாது.

### பொது சனம் விழிப்பாய் இருத்தல் வேண்டும்

இந்த விஷயத்தில் பொதுஜன அபிப்பிராயம் கவர்ச்சியுறல் வேண்டுமென்று விழைகின்றேன். பொது மக்களின் வலிமை பொருந்திய உணர்ச்சியான அபிப்பிராயமொன்றுதான் எங்கள் உணவு விற்பனை ஸ்தாபனங்களிற் காணப்படும் பல்வேறு தகுதியற்ற நிலைமைகளைத் திருத்த உதவி புரியும். ஆனால் பட்டண வாசிகளில் ஓர் மிகக் குறைந்த பங்கினரே இத்தாபனங்களை ஆதரிப்பவர்களாக விருப்பதால், பெரும [illegible] பட்டண வாசிகள் [illegible] அவர்கள்

---

## பாணந்துறைக் கந்தசுவாமி கோவில்

நிகழும் ஆடி மீ 4 உ (19 - 7 - 52) சனிக்கிழமை, காலை 8 மணி தொடக்கம் மகா சங்காபிஷேகமும் மாலை 5மணி தொடக்கம் யாழ்ப்பாண இசை வித்துவான்களால் விசேஷ சங்கீதக் கச்சேரி மேளக் கச்சேரிகளும் முத்துச் சப்பரத்தில் சுவாமி ஊர்வலம்வருதலும் மேற்படி கோயிலில் நடைபெறுமென அறியவருகின்றது.

---

உ

நடுக்கத்தைக்கெடுப்பது நமச்சிவாயவே!

திருச்சிற்றம்பலம்

இடுக்கண்பட்டிருக்கினு மிரந்தியாரையும்
விடுக்கிற்பிரானென்று வினவுவோமல்லோம்
அடுக்கற்கீழ்க்கிடக்கினு மருளினூமுற்ற
நடுக்கத்தைக்கெடுப்பது நமச்சிவாயவே.

திருச்சிற்றம்பலம்

---

அரசியல் அலை

# ஆட்களுக்குக் கூடுதலாக அரிசிக் 'கூப்பன்கள்'

## வேலி பயிரை மேய்கின்றதா?

## களவு கண்டுபிடித்தல் கஷ்டமா?

அரிசி அளவுச் சீட்டுக்கள் கொண்ட புத்தகங்கள் — அவைக்குத்தான் பெயர் 'கூப்பன்'. யுத்த காலத்தில் தமிழ் வழக்கில் வந்த ஆங்கில மொழித் திரிபு. இந்தத் திரிபுச்சொல் திரிபு எண்ணத்தையும், இப்பொருளைக் கையாளுபவர்களிடத்திற் கொணர்ந்து விட்டதே.

ஒரு ஊரில் 1000 ஆட்கள் இருப்பரேல் எவ்வகையாலும் 1000 அரிசிப் புத்தகங்களுக்கு மேலாக அந்த ஊருக்கு வழங்கப்பட்டிருக்க மாட்டாதென்பதை எவருமறிவர். இந்த ஆயிரத்திற் கைக்குழந்தைகள் வேறூரில் வேலை பார்க்குந் தன்மையினால் ஊரில் இல்லாதவர்கள் என்று ஒரு நூறுபோகுதல் புத்தகங்களுக்கு உரியராகார்.

இப்படியிருந்தும் சில ஊர்களிலே ஆட்கணக்குக்கு மேலதிகமாக அரிசிப் புத்தகங்கள் இருக்கின்றனவென்பது ஊர்க்கதை அல்ல உலகறிந்த இரகசியமாய்விட்டது.

மேலதிகமான புத்தகங்கள் எவ்வாறு தோற்றின? இவற்றிற்கு ஆதாரமான புள்ளி விபரங்கள் எங்கே? பன்னூற்றுக் கணக்காக மேலதிகம இருப்பது கைபிழைபாட்டினலா அன்றி கொஞ்சம் அறிந்த வஞ்சமா? இந்தச் சூழ்ச்சியில் யாரார் சேர்ந்திருக்கலாம் என்றெல்லாம் அரசாங்கம் அறியமுடியாதா என்று பொது சனம் கேட்கின்றார்கள்.

யாருமறியாது நடத்தப்பெற்ற படுகொலையையும் துப்பறிந்து வெளிப்படுத்தும் தத்துவம் அரசாங்கத்துக்கிருப்பதென்றறியும் பொதுமக்கள் இவ்வித படுசூழ்ச்சியை என் இன்னும் அரசாங்கத்தார் விசாரித்தறிய முடியாதுகிற்கின்றனர் என்று வியப்புறுகின்றார்கள்.

அழித்தற்றொழில் தாண்டவமாடும் இக்காலத்திலே ஆட்களைப் படைத்து அவர்களுக்கு அரிசிப் புத்தகங்கள் வழங்கக்கூடிய 'பிரமாக்கள்' இருக்கின்றமையும் ஒரு அதிசயமே! படைத்தற்றொழிலே நடமையாது காத்தற்கடமையும் பூண்டவர்களும் இருக்கிறார்களென்றால் இரகசியம் இரகசியமாகவே இருந்துவிடும் என்று எண்ணவேண்டியிருக்கிறது.

இதற்கென ஒரு குடிசன மதிப்பை எடுத்து அக்காலத்தில் மதிப்பெடுப்பவர்கள் கண்களுக்குத் தோற்றுது நிற்கும் 'பைசாசங்களை' அறிந்துவிடுவதுதானே என்று அரசியல் அலையில் ஒரு புத்தி புலனாகின்றது.

## அகில இலங்கைத் தமிழ்ப் பேச்சுப் போட்டி

இஸ்லாமிய புது வருடக் கொண்டாட்டத் தொடர்பில் அகில இலங்கைத் தமிழ்ப் பேச்சுப் போட்டியொன்றை அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்க மகாநாட்டார் ஒழுங்கு செய்வதாக அறியவருகிறது. சாதிமத வேறுபாடின்றி யாவரும் பங்குபற்றலாம்

(1) வர்பலா (2) தலைவர் ஜின்னு (3) நம்பிக்கை, ஒற்றுமை, கட்டுப்பாடு ஆகிய விஷயங்களில் அரசியற் கலப்பின்றிப் பேசவேண்டும். வெற்றி பெறுபவருக்குத் தங்கப் பதக்கம் பரிசளிக்கப்படும்.

குறித்த மகாநாட்டாருக்குத் தமிழ்த் தாயின் ஆசீர்வாதம் உரித்தாகுமென்பது சொல்லாமலேயமையும்.

## கதிர்காமத்தில் தண்ணீர் சாப்பாட்டு வசதி

கதிர்காமத் திருவிழாக் காலத்திலே குடிப்பதற்குச் சுத்தமான தண்ணீரும் சாப்பிடுவதற்குச் சுத்தமான சாப்பாடும் கொடுக்க அரசாங்கம் ஒழுங்குசெய்கின்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹு ஆடி மீ
ந உ வெள்ளிக்கிழமை


## யாழ்ப்பாண நகரப் புகையிரத நிலையம்

இலங்கைத் தீவின் வடபாற் சிறந்த நகரம் என்ற பெருமையோடு நின்றுவிடவில்லை யாழ்ப்பாணம். இத்தீபகத்தின்கண் குடிசனத் தொகையாலும், போக்குவரத்துப் பொலிவாலும், இன்ன பிறவாலும் வளம் பொருந்திய மாநகரங்களில் வாழ்நகரும் ஒன்று என்பதை எவரும் மறுக்கார். இத்தகைய மதிப்புவாய்ந்த இந்நகரிற் பொதுசன வசதிகள் இக்காலத்திற்கேற்ற முறையிலும் தேவைக்குரிய விதமாகவும் இல்லாதிருக்கின்றன என்று குறை கூறவேண்டியிருக்கின்றதென மனம் வருந்துகின்றோம்.

புகையிரத நிலையத்தை எடுத்துக்கொள்வோம். பிரயாணிகள் தொகையினலோ அன்றிப் பொருள்களின் போக்குவரவுப் பெருக்கத்தினலோ மிகக் கூடிய இந்தப் புகையிரத நிலயத்தில் இக்காலத்திற்குரிய வசதிகள் நிறுவப் பெறுதிருக்கின்றன என்று பட்டின சங்கம், நகர சங்கம் மாத்திரமன்று பொதுசனமும் பல வேளைகளில் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். முன்னர் பட்டின சங்கம் முயற்சிசெய்து இந்நிலயத் திருத்தத்திற்குத் திட்டம் போடப்பெற்றிருந்து யுத்தத்தின்பின் அவசர வேலை நிமித்தமாக உருக்கு முதலிய சில பொருட்கள் போதியளவு தேடிக்கொள்ளவியலாத காரணத்தால் இந்த அலுவல் அவ்வளவில் நின்றுவிட்டது.

இப்பொழுது மீண்டும் இந்தத் திட்டத்தைச் செய்கை முறையிற் கொணர்ந்துவிடவேண்டுமென்று நகர சங்கத்திற் சென்றவாரம் ஒரு தீர்மானம் நிறைவேறியது. அரசாங்கத்தார் அவதானிக்க வேண்டியவற்றில் பொதுசன வசதிகளை அளிக்கும் திட்டங்களை அவ்வப்போதே எவ்வகையாலும் செய்து முடிக்கக் கூடிய ஒழுங்குகளைக்கையாளுதல் ஒன்ருக இருத்தல்வேண்டும். யாழ்ப்பாணப் புகையிரத நிலயத்திற் பிரயாணிகள் உபயோகத்திற்காகும் மேடை இடவசதிகள் போதியனவாயில்லை என்று நாம் சொல்ல வேண்டியதில்லை. இக்கால முறைப்படி பிரதான புகையிரத நிலயங்களிலே மேடைவசதிகள் ஒரு தீவு போன்று இருபக்கங்களிலும் உள்ளனவாயிருத்தல் உலகவழக்காய்விட்டது. வெளியே செல்லும்இரதமும் உள்ளே வரும்இரதமும் வெவ்வேறு பாதைகளால் வெவ்வேறு மேடைகள் ஓரமாக நிற்கக் கூடிய முறையிருக்குமேயானுற் பிரயாணிகள் நெருக்கடியில்லாமலும் சுலபமாகவும் இரதத்திற் போக்குவரவு செய்யக் கூடியதாயிருக்கும்.

இந்த விதமாகப் புகையிரத நிலயத்தைச் சிறந்த மாதிரியாக விசாலிதது வைக்க இடவசதி இருக்கின்றமையால் அரசாங்கத்தார் இத்திட்டத்தை இனி ஒரு கணமும் பின்போடாது நடைமுறையிற் கொண்டுவருவார்கள் என்று பொதுசனம் எதிர்பார்க்கின்றனர். அரசாங்கத்தின் கடமையிலே தலைசிறந்ததென்று சொல்லவேண்டியது பொதுசன அவசரத் தேவைகளை அவ்வப்பொழுதில் அமைக்கவேண்டியது. சிற்பிகளால் அலங்கார மண்டபங்களை அழகுற அமைக்க வேண்டுமென்று பொதுசனம் வேண்டவில்லை. இந்திர நகரத்துக்குரிய எழில்மிகு சாதனங்களை அமைத்துத் தேவலோகசஞ்சாரத்தை இங்கு காட்டிவைக்கும்படி பிரயாணிகள்கேட்கவில்லை. இயல்பாகச் செய்து முடிக்கக்கூடிய பிரயாணிகளுக்கு ஆகும் வசதிகளை இக்கால முறைக்கும் உபயோகச் செம்மைக்கும் உதவக்கூடியவகையில் யாழ்ப்பாணப் புகையிரதநிலயத்தை முன்னர் போட்ட திட்டப்படி அரசாங்கஞ் செய்துவைக்க வேண்டுமென்பது எமது வேண்டுகோள்.

---

## திருக்கேதீஸ்வரம்

### ஆடி அமாவாசைத்தீர்த்தோற்சவம்

திருக்கேதீஸ்வரத்தில், ஆடி அமாவாசையும் யோகசிவராத்திரியும் ஒருங்கு நிகழும் புண்ணிய தினமாகிய வருகிற திங்கட்கிழமை (21-7-52) காலை கௌரியம்பாள் சமேத கேதீஸ்வரப் பெருமான் எழுந்தருளி மேற்படி கோவிலுக்கு வடதிசையில் (இரண்டுமைல் தூரத்திலுள்ள) சமுத்திர சங்கம தீர்த்தத்தில், அடியவர்கட்கு திருவருள் வெள்ளமாகிய தீர்த்தத்தை வழங்குவராகையால் அச்சமயத்தில் அகில இலங்கையிலுமுள்ள சைவ மக்கள் அங்குச் சென்று புண்ணிய தீர்த்தத்தில் மூழ்கி, கேதீஸ்வரப் பெருமானைத் தரிசனஞ் செய்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு திருக்கேதீஸ்வரத் தொண்டர்கள் அழைக்கின்றனர்.

---

# மாவைக் கந்தனுக்கு மாபெரும் விழா

## புராதன புண்ணியப் பொலிவு

கடம்பன், முருகன், கதிர்வேலன், இளையான், அழகன், வேலன், ஆறுமாமுகன் பன்னிருகையன், மயில்வாகனன் சேவற்கொடியன், குன்றமெறிந்தவன் என்றெல்லாம் மனமார நினைத்து, வாயார வாழ்த்திக் கந்தனை, திருப்பரங்குன்றில் ஒருகால், ஆலவாயில் ஒருகால், ஆவினன்குடியில்ஒருகால், ஏரகத்தில் ஒருகால், பழமுதிர்சோலையில் ஒருகால்என்று ஒவ்வொரு புராதன ஆலயத்தில் நின்று நெக்குநெக்குருகும் நாம் அவ்வாறே கதிர்காமத்திலும் மாவிட்டபுரத்திலும் நல்லூரிலும் செல்வச்சந்நிதியிலும் நின்று நைந்துநைந்துருகுவதற்குப் புண்ணிய புனித நாட்கள் அமைந்துள்ளன.

ஆனி அமாவாசைக்கடுத்த சட்டியிற் கொடியேற்றமும் ஆடி அமாவாசைக்கு முந்திய சதுர்த்தசியிற் தேரும், அமாவாசையிற்றீர்த்தமும் ஆகும். விசேடகாலம் இப்பொழுது நிகழ்கின்றது.

முருக பத்தர்கள் பல்லாயிரக் கணக்கானேர் இலங்கையில் எப்பாகத்திருந்தும் மாவைக் கந்தனை வழிபட்டு விரதமனுட்டித்து இப்புண்ணிய காலத்தைத் தவப்பொழுதாக்குவர்.

சைவமணிவிளக்குகளாக யாழ்ப்பாணத்தில் எழில்பெற அமைந்துள்ள இப்பெரும்ஆலயங்கள் எங்கள் நாட்டிற் சைவவாழ்க்கை தவருது ஓங்கிவர நினைவூட்டும் ஞாபக சின்னங்களாகஇருக்கின்றன. சைவவாழ்வும் சைவநெறியும் சைவமணமும் இந்நாட்டில் நின்று ஓங்கிக் கமழ இத் திருக் கோயில்கள் இறைவன் அருளால் இனிது பொலிக!

## எங்கள் அறிவித்தல்

ஆடி 6-ம் திகதி (21-7-52) திங்கட்கிழமை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தேர் தீர்த்தத்தின்பொருட்டு சைவப்பிரகாச யந்திரசாலையிற் கடமை ஆற்றுவோர்க்கு விடுமுறையாதலால். ஆகையால் 22-7-52 (செவ்வாய்க் கிழமை) இந்து சாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் வெளிவரா.

அதிபர்.

---

# கருணைவைத்து எம்மை ஆள்



மாவைக் கந்தன் மகா ஆலயம்

கலிகால வரதனே சலியாமெய்விரதியர்
கருத்தான தனியிரதனே
கன்னி தெய்வதயானை வள்ளிமகிழ் சுரதனே
கடமுனிக் கருள்தூரவனே
புலிபோலும்வாளசுரர் நலியவிமையோர்மேலிவு
போன்றவிடும்வடிவேலனே
புகழக்ரசோழன் மகள்துன்மவலிமாமுகம்
போக்கியிதமருள்சீலனே
மலிவாசமலரவன் தலையினிற் குட்டிட்டு
மறைதெருட்டிய போதனே
வல்வினையினேம் மனக்குறை மறையநிறைகருணை
வைத்தெம்மையாள் நீதனே
பொலிவான கலையோலியுமலையோலியுமலைவுறப்
பொங்குமாவைப்பதியினிற்
போற்றுமெய்யடியர் துறையாற்றியேவீற்றிடும்
பூரணனந்தவேளே.

---

## வலிகாமம் மேற்குத் தமிழாசிரியர் சங்க வருடாந்தக் கூட்டம்

இக் கூட்டம் 12-7-52 சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கமாக, சுட்டுடை சைவவித்தியாசாலையில் கூடியது. சங்கதலைவர் திரு. மு. சதாசிவம் அவர்கள் தலைமை வகித்தனர்.

நியாயவாதி திரு. அ. அமிர்தலிங்கம் B.A. அவர்கள் "தற்காலத் தமிழ்க் கவிதை" என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றினர்.

### உத்தியோகத்தர் தெரிவு:

திருவாளர்கள் வே. கந்தர் தலைவராகவும், சு. நல்லையா, K. வீரசிங்கம் சி. கார்த்திகேயர் உப தலைவராகவும், அ. ஆறுமுகம் காரியதரிசியாகவும், மு. கிருஷ்ணபிள்ளை உபகாரியதரிசியாகவும், த. சிதம்பரநாதன் தனதிகாரியாகவும் இன்னும் 13 பேரைக்கொண்ட நிர்வாக சபையும் தெரியப்பட்டது. சங்கப் போஷகர்களாக, கௌரவ தபால் தகவல் மந்திரி திரு. S. நடேசன் அவர்கள், செனட்டர் திரு. S.R. கனகநாயகம் அவர்கள், திரு. V. வீரசிங்கம் M.P. அவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

## சைவப் பிரசங்கம்

கடந்த 14-7-52 திங்கட்கிழமை இரவு 6-30 மணியளவில் காரைநகர் கருங்காலி ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் தலைமைவகித்த காரைநகர் இந்துக்கல்லூரி அதிபர் சைவத்திருவாளர் ஆ. தியாகராசா அவர்கள் M.A. M.Litt தமது தலைமைப் பேருரையில் இலங்கையின் வடபாகத்தில் மழைக்குறைவினுல் கமக்காரர் அதிக கஷ்டத்துக்குள்ளாகியிருக்கின்றர்கள் எனக் கூறி நன்மழைபெய்து கமத்தொழில் விருத்தியடைய "ஈசனை வேண்டல்" எனனும் விடயத்தை ஆரம்பித்து வைத்தார்கள்.

தலைவர் அவர்களும் தேவார ஆசிரியர் ஸ்ரீமத் மு. சுப்பையா தேசிகர் அவர்களும் ஏனைய சைவ அன்பர்களும் தேவார திருவாசகங்களை ஓதி இறைவனை வேண்டுதல் செய்தார்கள்.

பிரசாரகர் இணுவில் கனம் வடிவேல் சாமியார் அவர்கள் தமது பிரசங்கத்தில் எம் சைவ அன்பர்கள் சைவசமய ஒழுக்கத்தில் வளர்ச்சியடைவதற்கு மிருகண்டு முனிவர், சிவபாதவிருதயர்போற் சற்புத்திரரைத் தவஞ்செய்து பெறுதல் அத்தியாவசியமென்றும் சைவசமய வாழ்க்கை நடத்துதல் சைவ ஒழுக்கத்தில் வளர்ச்சியடைதற்கு அத்தியாவசியமென்றும் தலைவரின் பொறுப்பில் கல்வி பயின்றுவரும் 500 பிள்ளைகளும் சமய ஒழுக்கத்தில் பயிற்றப்பட்டு வருவார்களானுல் பேருதவியாகுமென்றும் கிரமமான முறையில் சைவ உண்மைகளைப் பிரசங்கம் செய்வதற்கு ஒரு பிரசாரப் படை அமைக்கப்படவேண்டுமென்றும் சைவ ஆலயங்கள் கிரமமான முறையில் நடத்தப்பட்டு வழிபடுவோருக்குப் பிரசங்கங்கள் மூலமாக அறிவூட்டி வருதல் அவசியமென்றும் குறிப்பிட்டார்கள்.

---

செய்திகள்: [illegible] இந்திய அரசாங்கம் தடுக்கிறது.

* * * * *

நூற்றுக்கு மூன்றுவீதம் இலங்கைக் குடிசனத்தொகை கூடியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## கிளிநொச்சிப் பகுதிக்கு ஒரு சைவப் பாடசாலை!

கிளிநொச்சி புதக்குடியேற்றமுள்ள பகுதி. இப்பகுதியில் ஏழை விவசாயிகளே வந்து குடியேறுகின்றனர். இதுவரை குடியேறிய மக்களில் பெரும்பகுதியினர் சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள். இவர்களுடைய பிள்ளைகளின் கல்வி நிலையும், சமயப் பழக்கவழக்கங்களும் பிற்போக்கான நிலையில் இருப்பது கவலைக்குரியதொன்றாகும். இங்கு ஓர் அரசினர் பாடசாலை உண்டு. அதில் அரைநேரம் (முற்பகல்) (பிற்பகல்) தமிழும் அரை நேரம் சிங்களமும் படிப்பிக்கப்படுகின்றன. அறிவும் போதிய ஆசிரியர்களும், இடவசதியும், மற்றும் சாதனங்களுமின்மையால் இப்பாடசாலை இருந்தும் இங்குள்ள பிள்ளைகளின் கல்வி நிலையைப் பூர்த்தி செய்யமுடியாதிருக்கின்றது. இது பற்றி அரசாங்கமும் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இச்சமயத்தில் "காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்று ...... கிறிஸ்தவர்கள் பாடசாலை ஒன்று ஸ்தாபித்து அதில் சைவப்பிள்ளைகளையும் சேர்த்துத் தங்கள் மத போதனையையே நோக்கமாகக் கொண்டு முயற்சியெடுத்துவருகின்றனர்! இவர்களுடைய பாடசாலையில் படிக்கும் பிள்ளைகளில் 80வீதமானோர் சைவப்பிள்ளைகள். இப்பிள்ளைகள் தங்கள் சொந்தமதப் பாடசாலையில் படித்துப்பயன்பெற இப் பகுதியில் ஒரு சைவப்பாடசாலையேனும் கிடையாது. இப் பிள்ளைகளின் பெற்றோர் "பிள்ளைகளின் சமயஅறிவு எப்படிப்போனுலென்ன யாதாயினும் படிக்கட்டும்" என்ற மனப்பான்மையினராகக் கவலையோடு பிள்ளைகளைக் கிறிஸ்தவ பாடசாலைக்கு அனுப்பி வருகின்றார்கள். கிளிநொச்சியில் சைவப்பாடசாலை இல்லாத பெருங் குறையை நிவர்த்திக்க, சைவநன் மக்கள் கவனமெடுக்கமாட்டார்களா? எவரைப் பார்க்கினும் அன்னியரைத் தூஷிப்பதே தொழிலாயிருப்பதன்றித் தன் குறையை நீக்கி நன்முயற்சியில் ஈடுபடுவதைக் காண்பது அரிதாகின்றதே! புனித சைவ மதப் பண்பாட்டை இப்பகுதியில் குடியேறும் மக்களின் வழித்தோன்றல்கள் அடைய முடியாத பரிதாபநிலையைக்கண்டும் தற்போதைய சைவப் பெரியார்களும் சைவஸ்தாபனங்களும் வாளா இருப்பது தர்மமாகுமா? ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இருந்தால் இந்நிலையைக்கண்டு பொறுத்திருப்பாரா? அவரது அடிச்சுவடுபற்றிய பெரியோர்கள் இன்றும் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றார்கள். யாழ்ப்பாணம்சைவபரிபாலனசபை கொழும்பு விவேகானந்த சபை, சைவ வித்தியா விருத்திச் சங்கம் முதலியன இத்துமதக் குழந்தைகளுக்கு ஏற்பட்டிருக்கும் இடுக்கணுக்கு விமோசனமளிக்க முன்வரமாட்டார்களா? கிளிநொச்சி, பரந்தன் முதலாகிய இடங்களில் விவசாயஞ் செய்து பெரும்பொருளீட்டும் பெரியோர்களேனும் ... இதில கவனம்செலுத்தினுல் இக் குழந்தைகளின் வருங்காலம் பாதுகாக்கப்படுமன்றோ?

போர்த்துக்கீச — ஒல்லாந்தரின் சமய அட்டூழியங்களுக்கு அகப்படாமல் தப்பிச் சந்ததி சந்ததியாகச் சைவசமயத்தில் வாழ்ந்துவந்து இப்போ மதச் சார்பற்ற சுயாட்சிய வாழ்விலே இருந்துகொண்டும் எமது குழந்தைகளை எமது தாய் மதப்பாடசாலையில் கல்வி பயிலவிடாது பிறமதப் பாடசாலையில் விடநேர்ந்த இப் பரிதாபமான — சகிக்கொணாத சந்தர்ப்பத்தில் சைவப் பெருமக்களும் ஸ்தாபனங்களும் ஆவனசெய்ய முன்வருவார்களா? இக் குழந்தைகளின் வருங்காலம் பாதுகாக்கப்படுமா? கிளிநொச்சிப்பகுதியில் சைவ சமயம் ... காப்பாற்றப்படுமா? மேன்மை கொள் சைவ நீதி' இங்கும் விளங்குமா?

இங்ஙனம்,

**ஓர் அன்பன்.**

கிளிநொச்சி,

### விளம்பரம்

**மோட்டார் வான் (Van) விற்பனவு**

விற்பனவு நாள்: திங்கட்கிழமை 28-7-52 காலை 10 மணியளவில்.

இடம்: யாழ்ப்பாணம் 3-ம் குறுக்குத்தெரு உதவிப் பதிவு காரியலாதர்கந்தோர்.

விபரம்: 'சேவலேட்' வான் நம். CY. 2473. 28-7-52 வரையில் வானைப் பார்க்க விரும்புவோர் புத்தூர் தபாற் கந்தோருக்கு எதிரேயுள்ள திரு. சி. நடராசவின் வளவில் பார்க்கலாம்.

தி. சண்முகராசா,
D. சிவகுரு
வலிகிழக்குஐக்கிய போக்குவரவுச் சங்க சோதகர்கள்

கோப்பாய்,
17-7-52.

M. 79 18-7-52.

## திருவடி முடிசூடிய அரசர்

### அறநெறி வழுவாது அரசு நடத்திய அடிகள்

களந்தை என்னுமூரிலே, திருவைந்தெழுத்தை நாள்தோறும் விதிப்படி ஓதும் பண்புடையராகிச் சிவனடியாரை வழிபட்டுத் திருத்தொண்டு செய்து வாழ்ந்தார் கூற்றுவ நாயனர்.

"தன்னர்முனைகள் தோள்வலியால்
வென்ற சூலப் படையார்தம்
நன்ம மந்தத் திருநாவில்
நாளும் நவிலும் நலமிக்கார்;
மன்னும் ஈசர் அடியார்தம்
பாதம் பரவிப் பணிந்தேத்தி,
முன்னுயெயாற் திருத்தொண்டின்
முயன்றார்; களந்தைமுதல்வனர்"

அவர் அருள்வலியாலே பல அரசரை வென்று பல நாடுகளையும் இரத, கஜ, துரக பதாதியென்னும் நால்வகைச் சேனைகளையும் பெருஞ் செல்வத்தையுமுடையராகித் தமக்கு முடிசூட்டுமாறு தில்லைவாழந்தணரைக் கேட்டார். சோழருக்கேயன்றி மற்றவருக்குத் தாம் முடி சூட்டுவதில்லை யென்று கூறித் தங்களுள் ஒரு குடியை மாத்திரம் முடியைக் காத்துக் கொள்ளும்படி இருத்தி அவர்கள் சேரநாட்டுக்குப் போனுர்கள். கூற்றுவ நாயனர் மனந்தளர்ந்து திருவடியை முடியாகச் சூட்டும்படி சுவாமியை வேண்டினர்.

அவ்வாறு திருவடியே முடியாகச் சூட்டப்பெறுதலும் கூற்றுவ நாயனர் நாடுகளனைத்தையும் ஒப்பற்ற அறநெறி வழுவாது அரசாண்டு, சிவஸ்தலங்களெங்கும் பூசனைபுரிந்து வாழ்ந்து சிவபெருமானுடைய திருவடியை யடைந்தார்.

"அப்பொன் நீடும் அம்பலத்துள்
ஆரா அமுதத் திருநடஞ்செய்
தம்பிரானர் புவியில்மகிழ்
கோயில் எல்லாம் தனித்தனியே
இம்பர் ஞாலம் களிகூர
எய்தும் பெரும்பூசனை இயற்றி
உம்பர் மகிழ அரசளித்தே
உமையாள் கணவன் அடி
சேர்தார்."

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

### இந்துவாலிப சங்க வேண்டுகோள்

சைவசமய விசேஷ தினங்களாகிய சரஸ்வதிபூசை, நாயன்மார் குருபூசை முதலியவற்றை எங்கள் கல்லூரி மாணவர் அனைவரும் ஆசாரத்துடன் நின்று நடத்த ஓர் ஆலயம் அவசியம் என்பதை உணர்ந்து ஒன்று கட்ட ஆரம்பித்துவிட்டோம்.

பெருந் தொகைப் பணம் செலவிட்டு மூலஸ்தானமும் அதனை அடுத்த அர்த்த மண்டபமும் கட்டி விசாலமான ஒரு தரிசன மண்டபத்திற்கு அத்திவாரமும் போட்டதோடு, நடராச விக்கிரகமும் அம்பாள் விக்கிரகமும் வார்ப்பித்துள்ளோம். தரிசன மண்டபத்தைக் கட்டி முடித்தற்குமாத்திரம் 10,000 ரூபா பிடிக்கும்.

நடராச விக்கிரகம் தாபித்தல் எதிரே வரும் கார்த்திகை மாதம் நடத்த நிச்சயித்துள்ளோம். அதற்கு 1500 ரூபா வரை தேவை. இப்பணத்தைத் தந்துதவும்படி சைவ அபிமானிகளைக்கேளாது வேறு யாரைக் கேட்பது? ஆனபடியால் இப் புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபடும்படி அனைவரையும் அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தந்துதவும் பணத்தொகைக்குப் பற்றுச்சீட்டுக் கொடுக்கப்படும் என்று இந்துவாலிப சங்கப் போஷகர், திரு. ச. ஜெபவீரசிங்கம் அவர்களும் இந்துக்கல்லூரி அதிபர் ஏ. குமாரசுவாமி அவர்களும் தெரிவிக்கின்றனர்.

### இயந்திர இரதங்கள்

இந்தியா, ஜப்பான், பிலிப்பைன் தீவுகள், இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியில் ஆசியாவில் கூடிய தொகை இயந்திர இரதங்கள் (Motor Cars) வைத்திருக்கும் நாடுகளுள் ஐந்தாம் நாடாய் இலங்கை வருகின்றதாம்.

இப்போ உள்ள இரதங்களின் தொகை 54,828.

## திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு, சென்னை

"ஈசனுக்கு அன்பிலார்
அடியவர்க்கு அன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார்
தமக்கும் அன்பில்லார்"

கடவுட் கொள்கையோடு கூடிய மொழி வளர்ச்சி நாட்டின் உயிர்நாடி. அதனை அன்று அரசர்களும் மடங்களும் வளர்த்து வந்தனர். இன்று அவற்றின் முழுப் பொறுப்பும் மதஸ்தாபனங்களைப் பொறுத்துள்ளன. அன்று மடங்கள் "ஓடிவரும் காரணர்க்கு உண்மை வை" என்ற வண்ணம் தங்களைத் தேடிவந்தவர்களுக்கு உபதேசம் செய்து வந்தன. இன்று ஊர் ஊராகத் தேடிப்போய்ச் சொல்லவேண்டியநிலை ஏற்பட்டிருக்கிறது. அதனைச் செவ்வையாக ஆற்றுவதே இம் மாநாட்டின் நோக்கம்.

சென்னை செந்தமிழ் நாட்டின் தலைநகரம். இங்கே எல்லாத் துறைகளிலும் சிறந்த அறிவாளிகள் இருக்கிறார்கள். சென்னையே சென்னியாகச் செந்தமிழ் நாட்டை ஆளுகிற தெனலாம். இங்கே செய்யப்படும் பணிகள் நாடு முழுவதும் செய்வதாகும். பல மதத்தினரும் சேர்ந்து வாழும் இங்கே கடவுட்கொள்கையை வளர்க்க வேண்டுவது மிகத் தேவை.

19-7-52 முதல் 28-7-52 வரை பத்து நாட்களிலும் ஒவ்வொரு பேட்டையாகப் பல பேட்டைகளிலும் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் திருவருளால் மாநாடு தொடர்ந்து நடைபெறுவதாக இருக்கிறது என்று செயற்குழுவினர் அறிவிக்கின்றனர்.

## உங்கள் நக்ஷத்திரம்?

### எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

**இவ்வாரப் பலன்கள் 20—7—52——26—7—52**

**மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.**

இந்தவாரம் வண்டிகள் காரணமானசெலவுண்டு. வாரமுடிவுக்கு முன் நெடுங்காலம் விரும்பியிருந்த மாற்றங்களைச் செய்யக்கூடியதாயிருக்கும். தொழிலாளர் அல்லது துணை வேண்டிநிற்பவர்கள் கஷ்டமுண்டாக்கக்கூடும். ஆனல் வார இறுதிக்கு முன் நீக்கக்கூடியதாயிருக்கும்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

இந்தவாரம் சட்டத்துறைமுயற்சிகளில் செலவுண்டு. புதுமுயற்சிகள் அதிக உழைப்பின் பின்தான் நல்ல பலன்தரும். குடும்பவிஷயங்கள் தளம்பும். சண்டையுண்டாக்கவிரைந்து முன்செல்லவேண்டாம்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

பணத்துறையில் மிகநல்லவாரம். மிகச்சிறு முயற்சியுடன் மிகப்பெரும இலாபம் உண்டாகும். வார இறுதிக்குமுன் விஷேச மாற்றங்கள் உண்டாக்கப்படும். குடும்ப சமாதானமும், மனச்சமாதானமும் நிச்சயம்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

இந்தவாரம் பெருஞ்செலவுண்டு. புதுமுயற்சிகளுக்குச் சொந்தக் கவனம் செலுத்தாவிட்டால் அவற்றால் நட்டம் உண்டாகக்கூடும். வார இறுதியில் தேகசுகத்தைப்பற்றி மனச் சலனமுண்டாகும்.

**சிங்கராசி மகம், பூரம், உத்தரம், 1ம் பாதம்.**

இந்தவாரம் விநோத அநுபவங்களையும் புது நட்புகளையும் தரும். அதிக நேரம் படிப்புக்குச் செலவழிக்கக்கூடியதாயிருக்கும் ஒரு முதிர்ந்த இனத்தவர் அதிகஉதவியாயிருப்பர். வாரஇறுதியில் சிறு உத்தியோகத் தொந்தரவுகளுக்கிடமுண்டு.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம பாதம்.**

உத்தியோகத்துக்கு நல்லவாரம். எதிர்பாராத பெரும் இலாபம் உண்டாகும். ஆனல் மனச்சமாதானமிராது. இனத்தவர்கள் சில தொந்தரவுண்டாக்குவார்கள். சண்டையுண்டாக்க முந்தவேண்டாம்.

**துலாம் சித்திரை 3,4ம்பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

வியாபாரத்தில் வாதத்துக்கிடமானவாரம். விசேஷமாற்றங்கள் செய்யத் தாமதிக்கவேண்டாம். தொழிலாளரும் துணைவேண்டிநிற்போரும் அதிகஉதவிசெய்வார்கள். மிகச்சிறுமுயற்சியுடன் மிகப் பெரும் இலாபம் உண்டாகலாம்

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

வாரத்தின் முதல் இரு நாட்களும் அதிக தொந்தரவையுண்டாக்கும். உத்தியோக விஷயங்களில் மனச் சலனத்துக்கும் அவமானத்துக்குமிடமுண்டு. வாரமிகுதிவியாபாரமுயற்சிக்குநல்லகாலம். ஆனல் வருந்தி முயற்சிக்கவேண்டும். ... பருக்கு உதவிசெய்ய ... போகவேண்டாம்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.**

வாரத்தின் முதலிரு நாட்களும் வியாபார முயற்சிக்கு நல்லகாலம். செவ்வாயும் புதனும் கவனமாய்க் கழிக்கவேண்டும். இந்த நாட்களில் ஒன்றும் புதிதாய்ச் செய்ய வேண்டாம். வாரமிகுதி திரும்பவும் நல்லதாகின்றது.

**மகாராசி உத்தராடம் 2,3,4ம பாதம திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

முன் அரைவாரம் புதுமுயற்சிகளுக்கு நல்லகாலம். நல்லஇலாபம் காத்திருக்கலாம். வியாழன், வெள்ளி, சனி அதிகம் மனச்சலனத்தை உண்டாக்கும். இனத்தவர்களுடன் தொந்தரவும் நண்பருடன் பிழைவிளக்கமும் உண்டாக்கும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

இந்த வாரம் அமைதியாயிருக்க இயலுமானுல் முயற்சிகளில் வெற்றி பெறலாம். சில விசேஷ காரியத்தில நண்பர்உதவிசெய்வர். ஆனல் அவர்களுக்குச் செலவழிக்கவேண்டும். வாரத்தின் கடைசிநாள் கவனமாய்க்கழிக்கவேண்டும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

சொந்தக்காரியங்களுக்குச்சிறிது கஷ்டமான வாரம். சிறிதுகாலத்துக்குத் தேகசுகம் தொந்தரவுண்டாக்கும். ... உத்தியோகமுயற்சிகளில்முன்னேற்றம் நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
— நகை —
வியாபாரிகள்
= 0 =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

# அரசாங்க பாஷைக் கமிஷன்

## மூன்றாவது விளம்பரம்

அரசாங்க பரிபாலனக் கருமங்களில் சிங்களத்தையும், தமிழையும் அரசாங்க மொழிகளாக உபயோகிக்கும் நோக்கத்துடன் அவ்வாறு செய்வதற்குரிய சிபார்சுகளை இலங்கை அரசாங்க சபையின் பொறுக்கு சபை ஒன்று ஒரு அறிக்கை மூலமாக வகுத்திருக்கிறது. இந்த அறிக்கை 1946ம் ஆண்டின் XXii ம் திருவாக காலப் பத்திரமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

பின் வருவனவற்றை விசாரணை செய்து அறிவிப்பதற்கும் அவைபற்றிச் சிபாரிசு செய்வதற்குமாக அதி உத்தம மகாதேசாதிபதி அவர்கள் அரசாங்க பாஷைக் கமிஷனை நியமித்திருக்கிறார்:-

1. மேலே காட்டிய பொறுக்கு சபை சிபாரிசு செய்துள்ள நடைவடிக்கைகளில் தேவையானவை யென்றும், சாரியசாத்தியமானவையென்றும் கருதப்படும் நடைவடிக்கைகளைக் கைக்கொள்ளுதற்குரிய கருமமுறை.

2. அந்த நோக்கத்தை அடைவதற்கு எடுக்கப்படவேண்டியவேறு எதும் நடைவடிக்கைகளும் அத்தகைய நடைவடிக்கைகளை எடுப்பதில் கைக்கொள்ளப்படவேண்டிய கருமமுறையும்.

3. அந்த நோக்கத்தை அடைவதற்குச் சகல அரசாங்க பகுதிகளது அல்லது அவற்றில் எதாவது ஒன்றினது அல்லது பலவற்றினது பரிபாலனக் கொள்கையிலேனும் பிற கருமத்திலேனும் செய்யப்படவேண்டிய எதும் மாற்றங்கள்.

இப் பிரச்சினை முழுவதும சம்பந்தமான ஒரு ஆரம்ப ஆராய்ச்சியைக் குறித்த கமிஷன் செய்து விட்டு அரசாங்கப் பகுதிகள் சிலவற்றை விரிவாக ஆலோசித்தது. அவ்வாறு ஆலோசித்து அதனது சிபாரிசுகளைத் தனது முதலாம், இரண்டாம், மூன்றும் இடைக்கால அறிக்கைகளிற் செய்திருக்கிறது. முதலாம், இரண்டாம் இடைக்கால அறிக்கைகள் முறையே 1951ம் ஆண்டின் XXi ம் இல. திருவாக காலப் பத்திரமாகவும் 1952ம் ஆண்டின் iii ம் இல திருவாககாலப் பத்திரமாகவும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. ஏனைய அரசாங்கப் பகுதிகள் சகலவற்றையும்பற்றிய கருமங்களை ஆற்றக் கமிஷன் இப்போது நிச்சயித்திருக்கிறது. அரசாங்கத்தின் கிரந்தாப் பகுதிகள் பலவித அளவில் பொதுசனங்களுடன் தொடர்புள்ளனவாய் பரிபாலனக் கருமங்கள், தொழிற்கலைக் கருமங்கள் இலக்கியக் கருமங்கள், விஞ்ஞானக் கருமங்கள் என்பவை சம்பந்தமானவையாய் இருக்கின்றனவென்பது, கிடைத்துள்ள தகவலிலிருந்து தெரியவருகிறது. இப்படியாக வுள்ள பல்வேறு பகுதிகளுக்குப் பிரதிநிதித்துவமாகப் பின்வரும் அரசாங்கப் பகுதிகள் உள என்று இப்போதைய விசாரணையின் பொருட்டுத் தெரியப்பட்டிருக்கின்றன.

1. "ரெஜிஸ்திரார் ஜெனரல்" எனப்படும் பதிவுக் கருமாதிகாரியின் பகுதி.
2. ரேகுப்பகுதி.
3. கோடுகள் அல்லது நீதித்தலங்கள்.
4. நீர்ப்பாசனப் பகுதி.
5. கல்விப்பகுதி அல்லது வித்தியா பகுதி.
6. தொல்பொருளாராய்ச்சிப் பகுதி எனவும் வழங்கப்படும் புதைபொருளாராய்ச்சிப் பகுதி.
7. அரசாங்க பாகுபர்ட்டதிகாரியின் பகுதி.

மேலே சொல்லப்பட்டுள்ள பகுதிகள், முந்தி ஆலோசிக்கப்பட்டுள்ள பகுதிகள், அல்லது இதுவரை கமிஷனால் விசாரணை செய்யப்படாத பகுதிகள் என்னும் இவற்றில் எந்த ஒரு பகுதியைப்பற்றியேனும், அதி முன்னரிலும் பார்க்கக் கூடிய விதத்தில் திறமையுடன் கருமம் ஆற்றவும் பொதுசனங்களுக்குச் சேவை செய்யவும்;

(அ) சிங்களத்தையும், தமிழையும் எந்தக் கருமங்களில, எந்த முறைகளினால் அதி சீக்கிரத்தில் உபயோகத்துக்குக் கொண்டுவரலாம்.

(ஆ) இதுபற்றி எந்தவிதமான முறைமாற்றத்தினை அல்லது அரசாங்கக்கருமமுறை மாற்றத்தினைக் கொண்டுவரவேண்டும், அல்லது எந்தவிதமான விசேட வசதிகளை அல்லது புதுமுறைகளை உண்டாக்க வேண்டும்:

என்பனவற்றில் பொதுசனங்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்தையும், விருப்பத்தையும் அறியக் கமிஷன் பெரிதும் விரும்புகிறது.

1951 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27 ம் திகதியைக்கொண்டு 1951ம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்து முதற் பகுதியில் உள்ளூர்ப் பத்திரிகைகளில் வெளியாகிய இரண்டாம் விளம்பரத்தின் தொடர்ச்சியாகவே இவ்விளம்பரம் பிரசுரிக்கப்படுகிறது.

இதுபற்றித் தங்கள் அபிப்பிராயங்களை அறிவிக்க, அல்லது ஆலோசனைகளைத் தெரிவிக்கச் சித்தமாயிருக்கும் பொதுசனங்களும், அரசாங்கப்பகுதித் தலைவர்களும் ஏனையோரும் அத்தகைய அபிப்பிராயங்களையும ஆலோசனைகளையும் எழுத்துமூலமான விஞ்ஞாபன ரூபத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகிறார்கள். அரசாங்க சேவையில் இருப்பவர்கள் அத்தகைய எழுத்து மூலமான விஞ்ஞாபனத்தைத் தங்கள் தங்களது பகுதித் தலைவர்கள் மூலமாக அனுப்புதல் வேண்டும். 1952ம்ஆண்டு ஒகஸ்ற் மாதம் 31ம் திகதிக்கு முன் சகல விஞ்ஞாபனங்களும் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அவை அனுப்பப்படுதல் வேண்டும்.

நேர்முகமாக வந்து வாய்ப்பிறப்புச் சாட்சியம் அளிப்பதற்கான ஒழுங்கு சந்தர்ப்பம் நேரும் பொழுது, அப்படி நேருங்கால் தான் செய்யப்படும்.

கமிஷனின் கட்டளைப்படி
என். டீ. விஜேசேகர
அரசாங்க பாஷைக் கமிஷன் காரியதரிசி.

அரசாங்கபாஷைக்
கமிஷன் கந்தோர்,
தபால் பெட்டி 598, மல்லிகை,
கும்பனித்தெரு—கொழும்பு.
1952ஆ, ஜூலை 1உ.
G. 14 1, & 22—7—51

## உணவைப் புனிதமாய் உபயோகியுங்கள்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

இவ்விஷயத்திற் சிறிதும் அனுதாபங் காட்டுகிறார்களில்லை. இக்கஷ்டத்திற்கு ஆளாகும் துர்ப்பாக்கிய சாலிகளிற் பெரும்பாலோர் பண்டகசாலைக்கு வெளியிலுள்ளோராகவே இருக்கின்றனர்.

தமிழ் மக்களின் பொருளாதாரம் வரவரக் கேவலநிலையை அடைந்து வருகிறது. உணவுக்குறைவும், அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஒரு குடும்பத்தில் ஒருவர் மாத்திரம் உழைத்து அக்குடும்பத்தோர் யாவரும் வாழ்க்கை நடத்தும் காலம் இனியேல் இல்லை. வருங்காலத்தில் ஆடவர் மகளிர் ஆகிய இரு திறத்தாரும் வாழ்வின் பொருட்டு வேலை செய்யவேண்டியவர்களாக இருக்கின்றனர். இதன் பயனாக இப்போது பிறநாடுகளில் நடைபெறுவது போல் நாமும் ஒருவேளைப் போசனத்தையாகுதல் வீட்டிற்கு வெளியே சாப்பிடுஞ் சந்தர்ப்பம் ஏற்படக் கூடும். ஆகையால் நாமெல்லோரும் ஒருங்கு திரண்டு போசனசாலைகளின் சுகாதார நிலையைத் திருத்துதற்கு முன்வருவோமாக.

அநேக நாடுகளில் மக்கள் சுத்தமற்ற ஸ்தாபனங்களை முற்றாகப் பகிஷ்கரிப்பதன் விளைவாகச் சுத்தமான உணவையும், சுத்தமான சுற்றாடலையும் பெற்றுக்கொள்ளுகின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள நாமும் இம்முறையை அனுசரிக்கலாம். அவ்வாறு செய்தால் நிச்சயமாகப் பயன் கிடைக்குமென நினைக்கிறேன். முன்னேற்றமடைந்த நகரங்கள் பலவற்றில் உணவு விநியோகஞ் செய்வோர் குழு என்னுஞ் சங்கங்களை ஸ்தாபிக்கின்றனர் என நான் அறியலானேன். தூய உணவையும் தூய சுற்றாடலையும் அளிப்பதே அச்சங்கங்களின் பிரதான நோக்கம்.

சுகாதார உத்தியோகஸ்தர்களைக் கொண்டு கிரமமாகப் பிரசங்கங்களும், சாதனை முறை விளக்கங்களும் செய்வித்துக் கொள்ளுகின்றனர். அவர்கள் உள்ளூர் சுகாதார அதிகாரிகளுடன், இயன்ற இயன்ற வழிகளிலெல்லாம் நிரம்ப ஒத்துழைக்கின்றனர். அதனால் அவர்கள் பொதுமக்களின் நம்பிக்கையையும் பெற்றுக்கொள்ளுகின்றனர்'

ஆகையால் ஜன சங்கமுறையில் சுகாதார சீர்திருத்தங்களை ஏற்படச் செய்தற்கு, 'உணவு விநியோகிப்போர் சங்கம்' ஒன்றை நகர மக்கள் எல்லாரும சேர்ந்து நிறுவிக்கொள்ளல் வேண்டுமென்று பிரதானமாகப் பெரியகடை, கோட்டை, புகையிரதஸ்தானம், சுண்டிக்குழி, வண்ணார்பண்ணை, பள்ளிவாசல் முதலிய வட்டாரங்களில் வதியும் மக்களை வேண்டிக்கொள்ளுகின்றேன்.

உங்கள் சேவைக்குரிய மக்களின் ஆரோக்கிய விருத்தியும், மகிழ்ச்சிப் பெருக்குமே உங்கள் சிறிய நோக்கமாக இருக்கவேண்டுமாகையால், தூய உணவையும், தூய சுற்றாடலையும் ஆக்கி அமைத்துக் கொள்ளத் தவறுதீர்களென மீண்டும் வற்புறுத்தி வேண்டி முடித்துக்கொள்கிறேன். ... நலங் கடந்த சேவை உணர்ச்சி என்றும் பாராட்டற்கு உரியது.

(அ) நீங்கள் இளமைப்பருவத்தை அடைய
சி. எம். சாமி
தங்க பஸ்பம்
உபயோகியுங்கள்
தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.
அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரத்த விருத்தியும் உண்டாக்கும். இல் வாழ்க்கையில் அதியற்புத சுகந்தரும். நீரழிவு, பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25—0—0
குருபஸ்பம் (தொய்வுக்கு)
தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும். அருமையானது.
24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20
மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனும்)
M. 16. 25-4-52—25-10-52.

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம்ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.
தினசரிப்பற்றுவரவு.
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.
உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியசலோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.
கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்
S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்
திறமான
ருணிமார்க் ஓடுகள்
13¾, 14 இஞ்சிகளிலும்
வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.
Std. 2

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday, July 18. 1952,